**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 , திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திரு.S.கோவேந்தன், B.A., LL.B., (Hons).,**

நீதித்துறை நடுவர் எண்.2,
திருப்பத்தூர்.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 24–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.120/2023</u>**

**CNR.NO. TNTU020065072023**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையம், ...... புகார்தாரர்
குற்ற எண்.79/2022.

// எதிரிடை//

1. தங்கமணி த/பெ. ராமச்சந்திரன்,
2. ராமச்சந்திரன் த/பெ. முனிசாமி,
3. கஸ்தூரி க/பெ. ராமச்சந்திரன் .... குற்றம் சாட்டப்பட்டர்கள்

(குற்றம்சாட்டப்பட்டவர்கள் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டார்கள்)

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி.எண்.120/2023 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையம், குற்ற எண்.79/2022 |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் விவரம் | | |
| 3 | பெயர்கள் | 1. தங்கமணி த/பெ. ராமச்சந்திரன்,<br>2. ராமச்சந்திரன் த/பெ. முனிசாமி,<br>3. கஸ்தூரி க/பெ. ராமச்சந்திரன் |
| 4 | தொழில் | -- |
| 5 | முகவரிகள் | A1 – A3<br>பசலிக்குட்டை,<br>ராச்சமங்கலம் அஞ்சல்<br>திருப்பத்தூர் மாவட்டம். |



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

<table>
<tr><td>6</td><td>வயது</td><td colspan="3">–</td></tr>
<tr><td colspan="5">நாள்</td></tr>
<tr><td>7</td><td>குற்ற நிகழ்வு</td><td colspan="3">09.03.2022</td></tr>
<tr><td>8</td><td>புகார்</td><td colspan="3">09.03.2022</td></tr>
<tr><td>9</td><td>கைது செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">A1 – 11.03.2022<br>A2, A3 – Anticipatory Bail.</td></tr>
<tr><td>10</td><td>எதிரிகள் பிணையில் வந்த நாள்</td><td colspan="3">A1 – 16.03.2022</td></tr>
<tr><td>11</td><td>வழக்கு துவங்கிய நாள்</td><td colspan="3">18.03.2026</td></tr>
<tr><td>12</td><td>விசாரணை முடிக்கப்பட்ட நாள்</td><td colspan="3">24.03.2026</td></tr>
<tr><td>13</td><td>தீர்ப்பு</td><td colspan="3">விடுதலை</td></tr>
<tr><td>14</td><td>தாமதத்திற்குரிய காரணம்</td><td colspan="3">–</td></tr>
<tr><td colspan="5">வழக்கின் நிலை</td></tr>
<tr><td>15</td><td>பிணைக்காலம்</td><td colspan="3">–</td></tr>
<tr><td>16</td><td>குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள்</td><td colspan="3">01.04.2022</td></tr>
<tr><td>17</td><td>பிரிவு 240 கு.ந.மு.வி(முதல் கேள்வி)</td><td colspan="3">17.03.2026</td></tr>
<tr><td>18</td><td>பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்திரவு</td><td colspan="3">–</td></tr>
<tr><td rowspan="4">19</td><td rowspan="4">முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை</td><td>அரசு தரப்பு சாட்சி</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா. 1</td><td>18.03.2026</td><td>--</td></tr>
<tr><td>அ.சா. 2</td><td>18.03.2026</td><td>--</td></tr>
<tr><td>அ.சா. 3</td><td>23.03.2026</td><td>23.03.2026</td></tr>
<tr><td>20</td><td>பிரிவு 313 கு.ந.மு.வி(வினாவல்)</td><td colspan="3">24.03.2026</td></tr>
<tr><td>21</td><td>தலைமறைவு எதிரிகளின் விவரங்கள் / அவரது ஆஜர்/ஒப்படைப்பு</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>



KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

| | | |
|---|---|---|
| 22 | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை |

இவ்வழக்கு கடந்த 28.04.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 24.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்களும், எதிரிகளுக்கு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சுரேஷ், அவர்களும், ஆஜராகியிருக்க, ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலினை செய்ததின் பேரில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

இவ்வழக்கில் கடந்த 09.03.2022 அன்று வாதி மற்றும் அவருடைய மனைவி V-Mart-கடையில் இருந்தபோது, எதிரிகள் மூவரும் கடையிடம் சென்று வாதியைப் பார்த்து அசிங்கமாக திட்டி, 1 மற்றும் 2-ம் எதிரிகள் கடையின் வராண்டாவில் இருந்த இரும்பு சேர்-2, பிளாஸ்டிக் சேர்-3, பாணிபூரி ஸ்டால் வைத்திருந்த கண்ணாடி பாக்ஸ் ஆகியவற்றை அடித்து உடைத்து சேதப்படுத்தியது குறித்து வாதி எதிரிகளைப் பார்த்து "ஏம்பா இப்படி செய்கிறீர்கள்" என்று கேட்டதற்கு 1-ம் எதிரி கையில் வைத்திருந்த உடைந்த இரும்பு சேர் கம்பியால் வாதியின் தலை, இடது கை முட்டி ஆகிய இடங்களில் அடித்தததைத் தடுக்க வந்த வாதியின் மனைவி வினோதினியை 3-ம் எதிரி அவரது தலைமுடியைப் பிடித்துக் கீழே தள்ளியுள்ளதாலும், புகார்தாரர் கத்தும் சத்தம் கேட்டு வந்த புகார்தாரின் அப்பாவை 2-ம் எதிரி பிடித்து தள்ளியுள்ளதாலும், மேலும், 1-ம் எதிரி அங்கிருந்து செல்லும்போது, கையில் வைத்திருந்த உடைந்த இரும்பு சேர் கம்பியை காட்டி



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

மிரட்டியுள்ளதாலும், எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii), 427–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(2)** இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக்கொண்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் ஆஜரானவுடன் நகல்கள் வழங்கப்பட்டு, குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரிகளிடம் வினவியபோது எதிரிகள் அதை மறுத்ததால் அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

**(3)** அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.8** வரையிலான ஆவணங்களும், **அ.சா.பொ.1** முதல் **அ.சா.பொ.4** வரையிலான சான்றுப்பொருட்களும் வழக்கிற்கு ஆதாரங்களாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(4) அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.**

(i) கடந்த 09.03.2022 அன்று திருப்பத்தூர் கிராமிய காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்வராஜ் நிலையப்பணியிலிருந்தபோது, அ.சா.1 திரு.ராம்குமார் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்குசென்று, அ.சா.1–ஐ விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தனது புலன் விசாரணையை முடித்து, எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii), 427–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

(ii) அரசு தரப்பு சாட்சியங்கள் முடிவுற்ற பிறகு சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச.


KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

பிரிவு 313(1)(b)–ன் கீழ் வினவியபோது எதிரிகள் "பொய் சாட்சியம்" என்றும், அவர்கள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினர்.

**(5). இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவெனில், அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான இந்திய தண்டனை சட்ட பிரிவுகள்.294(b), 323, 324, 506(ii), 427–ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு உள்ளதா? இல்லையா ? என்பதே ஆகும்.**

(i) **அ.சா.1–ன் சாட்சியத்தைப் பரிசீலிக்கையில்,**

அ.சா.1 ராம்குமார் தனது நீதிமன்ற விசாரணையில், கடந்த 09.03.2022 அன்று காலை 09.30 மணிக்கு நானும் எனது மனைவியும் எனது கடையில் இருந்தபோது, யாரோ சிலர் கூட்டமாக வந்து என்னை தாக்கிவிட்டுச் சென்றுவிட்டார்கள் என்றும், தனக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்து வந்ததால், எதிரிகள் தன்னைத் தாக்கியிருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நான் எதிரிகள் மீது புகார்வாக்குமூலம் கொடுத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். இவரின் மூலம் புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.1–இன் சாட்சியமானது அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை உறுதியூட்டும் வண்ணமாக இல்லை.

**(ii) அ.சா.2–ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில்,**

அ.சா.2 தனது நீதிமன்ற விசாரணையில், "கடந்த 09.03.2022 அன்று காலை 09.30 மணிக்கு நானும் எனது கணவரும் எங்களது



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

கடையில் இருந்தபோது, யாரோ சிலர் கூட்டமாக வந்து எங்களை தாக்கிவிட்டு சென்று விட்டார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2–ன் சாட்சியமானது எதிரிகள்தான் இக்குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதை நிரூபணம் செய்யும் வகையில் அமையவில்லை.

<u>(iii) அ.சா.3–ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில்,</u>

இவ்வழக்கில் கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்ட அ.சா.3 காவல் உதவி ஆய்வாளர் திரு.விஜய், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.செல்வராஜ் கடந்த 09.03.2022 அன்று அ.சா.1 ராம்குமாரிடம் (அ.சா.ஆ.1) புகார் வாக்குமூலம் பெற்று, (ஆ.சா.ஆ.2) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, (அ.சா.ஆ.3) பார்வை மகஜர், (அ.சா.ஆ.4) மாதிரி வரைபடம் மற்றும் (அ.சா.ஆ.5) கைப்பற்றுதல் மகஜர், (அ.சா.ஆ.6) படிவம் 91 தயார் செய்து, அ.சா.1–ற்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து (அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8) காயச்சான்றிதழ்கள் பெற்று, இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து சாட்சிகளின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

<u>(iv) எதிரிகளுக்கு எதிராக இ.த.ச.பிரிவுகள்.294(b), 323, 324, 506(ii), 427–இன் கீழான குற்றச்சாட்டுக்கள் குறித்து பரிசீலிக்கையில்,</u>

இவ்வழக்கின் அ.சா.1 புகார்தாரரே தனது நீதிமன்ற சாட்சியத்தில், எதிரிகள் மீது சந்தேகத்தின் பேரில் புகார் அளித்துள்ளதாகக்



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

கூறியுள்ளதாலும், எதிரிகள் மீதான மேற்படி குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அமையாததாலும், அ.சா.3 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளுக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கருத முடியாது என்றும், இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

மேலும், அரசு தரப்பில் எழும் சந்தேகத்தின் பலன் எதிரிகளுக்கு சென்றடைய வேண்டும் என்பதே இயற்கை நீதி தத்துவமாகும்.

**(6)** எனவே, அரசு தரப்பு வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, அரசு தரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து 1–ம் எதிரியை இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(ii), 427–ன் கீழும், 2–ம் எதிரியை இ.த.ச. பிரிவுகள் 294(b), 427–ன் கீழும், 3–ம் எதிரியை இ.த.ச. பிரிவுகள் 294(b), 323–ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து கு.வி.மு.ச.248(1) பிரிவின்படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

(7). இந்த வழக்கில் **C.P.No.316/2022**–ல் கண்ட **அ.சா.பொ.1 முதல் அ.சாபொ.4** வரையிலான சான்று பொருள்களான உடைந்த இரும்பு சேர் கம்பி–1, உடைந்த இரும்பு சேரின் கட்டை பாகம் சிறிது, உடைந்த பிளாஸ்டிக் சேரின் பாகம் சிறிது, பாணிபூரி ஸ்டாலின் உடைந்த கண்ணாடி பாகம் சிறிதளவு ஆகியவை மேல்முறையீட்டு காலத்திற்குப் பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணையம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்பு ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லச்சொல்ல அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு திருத்தங்களுக்குப் பிறகு 2026-ம் ஆண்டு மார்ச் மாதம்-24 ஆம் நாளான இன்று என்னால் அவையறியப் பகரப்பட்டது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

நீதித்துறை நடுவர் எண்.II
திருப்பத்தூர்.

**இணைப்பு**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| **அ.சா.1** | திரு. ராம்குமார் |
| **அ.சா.2** | திருமதி. வினோதினி |
| **அ.சா.3** | திரு. விஜய், காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சாட்சி ஆவணங்கள்**

| | |
|---|---|
| **அ.சா.ஆ.1** | புகார் வாக்குமூலம் |
| **அ.சா.ஆ.2** | முதல் தகவல் அறிக்கை |
| **அ.சா.ஆ.3** | பார்வை மகஜர் |
| **அ.சா.ஆ.4** | மாதிரி வரைபடம் |
| **அ.சா.ஆ.5** | கைப்பற்றுதல் மகஜர் |
| **அ.சா.ஆ.6** | படிவம் – 91 |
| **அ.சா.ஆ.7**<br>**அ.சா.ஆ.8** | காயச்சான்றிதழ்கள் |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்– C.P.No.316/2022</u>**

**அ.சா.பொ.1** உடைந்த இரும்பு சேர் கம்பி–1

**அ.சா.பொ.2** உடைந்த இரும்பு சேரின் கட்டை பாகம் சிறிது

**அ.சா.பொ.3** உடைந்த பிளாஸ்டிக் சேரின் பாகம் சிறிது

**அ.சா.பொ.4** பானிபூரி ஸ்டாலின் உடைந்த கண்ணாடி பாகம் சிறிதளவு

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்று ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் – இல்லை</u>**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

நீதித்துறை நடுவர் எண்.II
திருப்பத்தூர்.

**<u>குறிப்பு :</u>**

1. சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணை சமயம் எதிரிகள் பிணையில் இருந்தனர்.
3. மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு பிணை ஆவணம் ரத்து செய்து உத்திரவிடப்படுகிறது.
4. வழக்கின் முடிவு பற்றி சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.
5. வழக்குச் சொத்துக்கள் குறித்த உத்தரவு வழக்குச் சொத்துக்கள் பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டது.

// உண்மை நகல்//

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

நீதித்துறை நடுவர் எண்.II
திருப்பத்தூர்.